சார்பு நீதிமன்றம், இலால்குடி.
நாள்.03.12.2024
OS.No.173/2019
PW 1 : நாராயணன் (வயது 80 ) த/பெ.சுந்தரம்
( சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

**குறுக்கு.வி தொடர்ச்சி**

நான் பங்கு பிரித்து கேட்டு பாக தாவா தாக்கல் செய்துள்ளேன். அ.வ.எண்.2939/1979 வழக்கில் தாக்கல் செய்த நிறைவேற்று எண்.44/1995 ல் நடைபெற்ற ஏல சான்றை ரத்து செய்ய நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எந்த அறிவிப்பும் வரவில்லை. வழக்கில் பாகத்தை தவிர வேறு பரிகாரம் கேட்டுள்ளேனா என்றால் பாக பரிகாரம் மட்டுமே கேட்டுள்ளேன், ஏல சான்றை ரத்து செய்ய பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரிதான். பேப்பர் சுவாதீனம் செய்ததாக கட்சி எடுத்துள்ளேனா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சொத்தினை நீதிமன்ற ஏலத்தில் விற்று சுவாதீனம் எடுத்துவிட்ட நிலையில் சொத்தில் பாக தாவா கேட்க முடியாது என்றால் அது பற்றி தெரியாது. எனக்கு அனைத்து விவரங்களும் தெரிந்தும் பின் யோசனையுடன் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிராதுடன் என்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் எல்ஐசி பத்திரம். copy of EP in O.S.No.2939/1979 தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனக்கு நிறைவேற்று மனுவில் ஏலம் போன விவரம் தெரிந்ததால் தான் அதற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**ம.வி** - இல்லை.

/ signed /
நாராயணன்

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சுருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார்

R MOHANA
Digitally signed by R MOHANA
Date: 2024.12.03 19:00:34 +0530

சார்பு நீதிபதி
இலால்குடி